சட்டப்பேரவையில் முறையாக பதிலளிக்காத

த.வெ.க. ஆட்சிக்குப் பாடம் புகட்ட உதயசூரியன் சின்னத்தில் வாக்களிப்பீர்!

தாராபுரத்தில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் உரை!

தாராபுரம், அக்.6-

தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தல் நடைபெறுவதையொட்டி, கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்ட மன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் தனது தேர்தல் பரப்புரையை மேற்கொண்டார். தாராபுரம் பெரியார் சிலை அருகில் பெருந்திரளாகக் கூடியிருந்த மக்கள் மத்தியில் அவர் எழுச்சிமிக்க உரையாற்றினார்.

கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

முதலில் தந்தை பெரியார் சிலைக்கு முன்பாக, நம்முடைய அன்புச் சகோதரி, நமது வெற்றிவேட்பாளர் சுகன்யா அவர் களுக்கு, இந்த இடைத்தேர்தலில் நீங்கள் அத்தனை பேரும் உதயசூரியன் சின்னத் தில் வாக்களிக்க வேண்டும் என்று அன்பு டன் கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வளவு சிறப்பான, அன்பான, ஆர வாரமான, எழுச்சியான வரவேற்பு அளித் திருக்கக்கூடிய அத்தனை பேருக்கும் என் னுடைய நன்றியையும், வணக்கத்தை யும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்கனவே ஒரு வாரத்திற்கு முன்பு தாராபுரத்திற்கு வருகை தந்து பல்வேறு இடங்களில் சகோதரி சுகன்யா அவர் களுக்காகத் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட் டேன். அதன் பிறகு, நான்கு நாட்களுக்கு முன்பு மதுராந்தகம் சென்று, அங்கேயும் நம்முடைய வெற்றிவேட்பாளர் பரந்தா மன் அவர்களுக்காக உதயசூரியன் சின் னத்திலே வாக்கு சேகரித்தேன். நிச்சயம் மதுராந்தகத்திலே நம்முடைய வெற்றி வேட்பாளர் பரந்தாமன் அவர்கள் வெல் லப்போவது உறுதி. நிச்சயம்.

நல்வாய்ப்புதான் இந்த இடைத்தேர்தல்!

உங்களிடத்தில் கேட்டுக்கொள்வதெல் லாம், மதுராந்தகத்தில் எவ்வளவு வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறுகிறோமோ, அதைவிட அதிகமான வாக்கு வித்தியா சத்தில் தாராபுரத்தில் நம்முடைய வெற்றி வேட்பாளர் சுகன்யா அவர்களை உதய சூரியன் சின்னத்தில் நீங்கள் வாக்களித்து, நிச்சயம் வெற்றி பெற வைப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

ஐந்து மாதங்களுக்கு முன்னால், இதே மாதிரி வந்து கேட்டேன். அப்பொழுது பெரிய எனக்கு அல்வா கொடுத்தீர்கள். அன்று நீங்கள் எனக்கு அல்வா கொடுத்த தினால்தான், இன்று முதலமைச்சர் தின மும் உங்களுக்கு ஒரு அல்வா கொடுத்துக் கொண்டிருக்கிறார். இப்போது உங்களுக் கும் ஒரு வாய்ப்பு. இந்த முதலமைச்சருக்கு நீங்கள் ஒரு அல்வா கொடுப்பதற்கு ஒரு நல்வாய்ப்புதான் இந்த இடைத்தேர்தல்.

திறமையான வழக்கறிஞர் உங்களில் ஒருவர்!

இந்த இடைத்தேர்தலில் ஒரு நல்ல வேட்பாளரைத் தலைவர் அவர்கள் உங் களிடத்தில் ஒப்படைத்திருக்கிறார்கள். சகோதரி சுகன்யாவை உங்களிடத்தில் நான் அறிமுகப்படுத்தத் தேவையில்லை, உங்கள் அத்தனை பேருக்கும் தெரிந்த வர். நன்கு படித்தவர், பண்பானவர், ஒரு திறமையான வழக்கறிஞர். தாராபுரம் பகுதி மக்களுடைய தொகுதி மக்கள், உங் களுடைய ஒவ்வொரு கோரிக்கையும் தெரிந்தவர். உங்கள் தொகுதிப் பிரச் சினை, உங்கள் பகுதிப் பிரச்சினை, உங் கள் தெருப் பிரச்சினை அத்தனையும் தெரிந்தவர். உங்களுக்காகச் சட்டமன்றத் திற்குச் சென்று உங்களுடைய குரலாக ஒலிக்கக் கூடியவர்.

முக்கியமாக, 'பெட்டி பாமா'வாக இருந் தால் நூற்றில் ஒருவராக இருப்பார்கள். நம்முடைய சகோதரி சுகன்யா உங்களில் ஒருவராக, மக்களில் ஒருவராக மக்க ளோடு மக்களாக உங்களுடைய பிரதிநிதியாக இருப்பார். அதைவிட முக்கி யமாக, ஒவ்வொரு தேர்தலுக்கும் கட்சி மாறுகிற, தலைவரை மாற்றிக் கொள்கிற, கொள்கையை மாற்றிக் கொள்ளக்கூடிய வர் இல்லை சகோதரி சுகன்யா அவர்கள். ஒரே தலைவர், ஒரே கட்சி, ஒரே கொள்கை என்று மக்கள் பணியாற்றி வரக்கூடியவர் தான் சகோதரி சுகன்யா அவர்கள். அவர் களை நீங்கள் மிகப்பெரிய அளவிலான



வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைத்து, சட்டமன்றத்திற்கு அனுப்ப வேண்டும்.

தாராபுரம் தொகுதிக்கு திராவிட மாடல் அரசின் திட்டங்கள்!

முக்கியமாக, இந்த தாராபுரம் தொகு திக்கு ஏற்கனவே நாம் ஆட்சியில் இருந்த போது, 2021 - 2026 ஆம் ஆண்டு என்னென்ன திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று கூறி, அந்த உரி மையோடு வாக்கு கேட்டு வந்திருக்கி றேன். இந்தத் தாராபுரம் தொகுதியில், நம் முடைய தலைவர் முதலமைச்சராக இருக்கும்போது திராவிட மாடல் ஆட்சியில் ரூபாய் 12 கோடி மதிப்பீட்டில், அரசு கலை அறிவியல் கல்லூரி அமைக்கப்பட்டது நம் முடைய தலைவருடைய ஆட்சியில். அது மட்டுமல்ல, ரூபாய் 24 கோடி மதிப்பீட்டில் அரசு மருத்துவமனை கட்டிக் கொடுத்தது நம்முடைய தலைவர் திராவிட மாடல் ஆட்சியில்.

ரூ.40 கோடியில் ஐந்து தடுப்பணைகள்!

ரூ.40 கோடியில் ஐந்து தடுப்பணைகள் நாம் கட்டிக் கொடுத்திருக்கிறோம். 2 கோடி யில் ஒரு தினசரி சந்தை. 9,000 பயனாளி களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட் டது நம்முடைய ஆட்சியில். இன்று நகராட் சியில் 24 கோடியில் 10 எம்.எல்.டி திறன் கொண்ட கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் திட்டம் கொண்டு வரப்பட்டது நம்முடைய ஆட்சியில். இத்தனையும் செய்த பிறகுதான் வெற்றி வாய்ப்பை நீங் கள் கொடுக்கவில்லை. ஆனால் இன்று ஒருவர் ஆட்சி அமைத்திருக்கிறார். நம்மு டைய தலைவர் பாணியில் சொல்ல வேண்டுமென்றால், அவர் சீஃப் மினிஸ் டர் கிடையாது, சீப் மினிஸ்டரா? இவர் எப்படி ஆட்சி அமைத்தார் என்று உங்க ளுக்குத் தெரியும்.

தமிழ்நாட்டில் ஒரு கட்சி ஆட்சி அமைக்க வேண்டும் என்றால், குறைந்தது 118 சட்ட மன்ற உறுப்பினர்களைப் பெற வேண் டும். இவர்களுக்கு 118 சட்டமன்ற உறுப்பி னர்கள் இருக்கிறார்களா? கிடையாது. தமிழ்நாட்டு மக்கள் இவர்களைத் தேர்ந் தெடுக்கவில்லை. வெறும் 107 இடங் களில் மட்டும்தான் வெற்றிபெற்றார்கள். பிறகு எப்படி ஆட்சி அமைத்தார்கள்? நம் தி.மு.க. போட்ட பிச்சை, நம் தலைவர் போட்ட பிச்சையில்தான் இன்று இந்த ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. எப்படி? கிட்டத்தட்ட எட்டு வருடங்களாக நம்மோடு கூட்டணியில் இருந்து, நம் தலைவர் பெய ரைச் சொல்லி, நம் தலைவருடைய புகைப்படத்தைக் காட்டி, திராவிட மாடல் ஆட்சியினுடைய சாதனைகளையெல் லாம் கூறி, மக்களிடத்தில் சென்று மக்களு டைய வாக்குகளைப் பெற்று, வெற்றி பெற்று சட்டமன்ற உறுப்பினரான சில சட்டமன்ற உறுப்பினர்களுடைய ஆதர வைப் பெற்றுத்தான் இன்று இந்த ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. இவையெல் லாமே உங்களுக்குத் தெரியும்.

பெட்டி பாமாவின் 'அந்தர் பல்டி'!

சில சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, சில கட்சித் தலைவர்கள் அலுவலகத்திற்கு சோஃபா சென்றது. சோஃபாவை வாங்கி, சில கட்சித் தலைவர்கள் அவர்களுடைய அலுவலகத்தில் வைத்துக் கொண்டார்கள். கட்சித் தலைவர் என்றால் கட்சி அலுவல கம் என்றால் சோஃபா. ஆனால், அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் என் றால் வெறும் பெட்டிதான். அதனால்தான் இன்று இந்த, உங்களுடைய சட்டமன்ற உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தீர்களே, சத்ய பாமாவா? அவர்களுக்கு நீங்கள் வைத்தி ருக்கின்ற பெயர் `பெட்டி பாமா'தான். தலைவர் இன்னொரு பெயர் வைத்து விட்டுப் போய்விட்டார். `பல்டி பாமா'. பல்டி என்றால் பல்டி, உங்க வீட்டுப் பல்டி, எங் கள் வீட்டுப் பல்டி இல்லை, `அந்தர் பல்டி'.

எவ்வளவு திமிர்? எவ்வளவு கொழுப்பு?

வெற்றி பெற்று, உங்களிடத்தில் வந்து அ.தி.மு.க. சின்னத்தில் இரட்டை இலை யில் வாக்கு கேட்டு, இப்பொழுது இருக்கக் கூடிய முதலமைச்சரை நம்மைவிட மோச மாக, மட்டமாக வாயில் சொல்லக்கூடாத வார்த்தைகளையெல்லாம் சொல்லித் திட்டி, வாக்கு வாங்கி வெற்றி பெற்று, சட்ட மன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்றது மே 12ஆம் தேதி. வெறும் 12 நாட்கள்தான், 24ஆம் தேதி கட்சிப் பதவி, சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்து விட்டு, அந்தக் கட்சியில் போய் சேர்ந்து விட்டு, பிறகு அந்தக் கட்சியிலேயே சட்ட மன்ற உறுப்பினராகப் போட்டியிடும் வாய்ப்பைப் பெற்று, மீண்டும் உங்களி டமே வந்து, `எனக்கு இந்தக் கட்சியில் வாக்கு செலுத்துங்கள்', `இன்று இந்த முறை இந்தச் சின்னத்தில் வாக்கு செலுத் துங்கள்' என்று கேட்கிறார்கள் என்றால், அவர்களுக்கு எவ்வளவு திமிர் இருக்கும். எவ்வளவு கொழுப்பு இருக்கும்? அவர் களுக்கே அவ்வளவு திமிர் இருந்தால், கொழுப்பு இருந்தால், அவர்களுக்கு வாக்கு செலுத்திய உங்களுக்கு எவ்வளவு கொழுப்பு இருக்கும், திமிர் இருக்கும்? அதை இந்தத் தேர்தலில் நீங்கள் காட்ட வேண்டுமா, வேண்டாமா? காட்டியே ஆக வேண்டும்.

`சீப்' மினிஸ்டர் இருக்கிறார் நாளைக்கு வருகிறாராம். வாகனப் பிரச்சாரமாம். அதாவது சும்மா எல்லாம் வரமாட்டார், ஹெலிகாப்டரில்தான் வருவார்.

முக்கியமாக மதுராந்தகம் தொகுதி மக் களுக்கும், தாராபுரம் தொகுதி மக்களுக் கும் பெரிய நன்றி சொல்ல வேண்டும். ஏன் தெரியுமா? இப்போது இருக்கிறார் அல்லவா சீஃப் மினிஸ்டர், தேர்தல் நேரத் தில் வீட்டை விட்டு வெளியே வராதவர். மொத்தமாகவே ஒரு எட்டு நாட்கள்தான் வீட்டை விட்டு வெளியே வந்தார்.

முதல் முறையாக டீ கடை!

இப்போது மதுராந்தகத்தில் நேற்று கிட் டத்தட்ட எட்டு மணி நேரம். `சார் அது தான் டீ கடை', `ஓ, இதுதான் டீ கடையா, அங்கே என்ன கிடைக்கும்?' `சார் டீ கிடைக்கும்', `ஒரு டீ வாங்கிக் கொடுங் கள்'. முதல் முறையாக டீ கடைக்குச் செல் கிறார். `அங்கே என்ன நிற்கிறது?' `சார் அதுதான் டிராக்டர்'; `ஓ, இதுதான் டிராக் டரா, வாருங்கள் அதில் ஏறி உட்கார்ந்து கொள்வோம்'. டிராக்டர் ஓட்டத் தெரிய வில்லை, எல்லாருக்கும் டிராக்டர் ஓட்டத் தெரியாது. அதாவது, வீட்டை விட்டே வெளியே வராமல் இருந்த ஒரு முதல மைச்சரை இன்று மதுராந்தகம் பகுதி மக்களும் தாராபுரம் தொகுதி மக்களும் ரோடுரோடாகஅலையவிட்டிருக்கிறார்கள்.

அதுவும் எப்படிப் போகிறார்? ஒரு வாரத் திற்கு முன்பு இங்கு வந்தார். கத்து கத் தென்று கத்தினார். மதுராந்தகம் சென் றார், கத்துனா கத்து, அப்படியொரு காட்டுக் கத்து. சட்டமன்றத்தில்நான் கூறிவிட்டேன், `முதலமைச்சர் பேசப் போகிறார் என்றால் முன்னாடியே சொல்லிவிடுங்கள்'. `ஏன்?' என்றார்; நாங்கள் எல்லாம் காதுக்குப் பஞ்சு வாங்கி வைத்துக்கொள்ள வேண்டும், அந்த அளவுக்குக் கூச்சல்.

அவரை மிஞ்சிய நடிப்பு!

நேற்று முன்தினம், தாராபுரத்திற்கு வந் தாரா? அவருடைய செயல்பாடு பெரிய செயல்பாடு. இப்போதும் கத்தோ கத் தென்று கத்துகிறார். நாங்கள், `ரத்த அழுத் தம் வந்துவிடப் போகிறது. ஐயா கத்தாதீர் கள்' என்று சொன்னதனால் கத்துவதை நிறுத்திவிட்டார். அவருடைய நடிப்பிற்கு முன்னால் `பெட்டி பாமா' அக்கா இருக்கி றார்கள் அல்லவா, அவர்களுடைய நடிப்பு அவரையே மிஞ்சிவிட்டது.

அவர் அனைவருக்கும் நன்றி சொல் லிக் கொண்டிருக்கும் போது, பின்னா லிருந்து ஓர் அமைச்சர், ``நீங்க டீ ஆற்றிய தெல்லாம் போதும், நடிப்பை ஆரம்பியுங் கள்'' என்றவுடனே, அந்த அம்மா ஒரே அழுகை. எனக்குப் புரியவில்லை, அந்த அம்மா ஏன் அழுதார்கள்? வாக்கு செலுத் திய நீங்கள்தான் அழ வேண்டும். ஏன் அந்த அம்மா அழுதார்கள்? எனக்குப் புரியவே இல்லை.

இப்படிப்பட்ட ஒரு கேடுகெட்ட ஆட்சி. ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினராக, கிட் டத்தட்ட ஏழு அ.தி.மு.க. சட்டமன்ற உறுப் பினர்களைப் பெட்டியைக் கொடுத்துத் தூக் கியிருக்கிறார்கள். உண்மையாக, எடப்பாடி பழனிசாமிதான் அழ வேண்டும். அவருக் குத்தான் இழப்பு. ஆனால், இப்போதுதான் அவர் வாயைத் திறந்து பேச ஆரம்பித்தி ருக்கிறார்.

பிடித்து வைத்த பிள்ளையார்!

நீங்கள் அத்தனை பேரும் எந்தத் தொலைக்காட்சி பார்க்கிறீர்களோ இல் லையோ, சட்டமன்ற நிகழ்ச்சிகளை நேர லையாக யார் என்ன வேலை பார்க்கி றோமோ இல்லையோ காலை 9:30 மணிக்கு அலாரம் வைத்து, சட்டமன்ற நிகழ்ச்சிகள் பார்க்கிறீர்கள், நன்றாக இருக் கிறதா? நாங்கள் படுகின்ற பாடு எங்க ளுக்கு மட்டும்தான் தெரியும். எவ்வளவு பெரிய கொடுமை தெரியுமா?

ஒரு நான்கே நான்கு விஷயம் சொல் கிறேன், நீங்கள் யோசித்துப் பாருங்கள் எங்கள் நிலைமையை. ஒரு சட்டமன்ற உறுப்பினர் எழுந்து பேசுகிறார். `எங்க ளுக்கு முதலமைச்சர் பேசுவதைப் பார்க்க வேண்டும். நாங்கள் அவருக்குப் பின் னால் உட்கார்ந்திருக்கிறோம்' என்கிறார். இவர் பேசி கிழிக்கிறார். எதற்குமே வாயைத் திறக்கத் தெரியாது, ஒரு மண் ணும் தெரியாது. பிடித்து வைத்த பிள்ளை யார் மாதிரி உட்கார்ந்திருப்பார். வாயைத் திறந்ததே கிடையாது.

இவருக்குப் பின்னால் ஒரு சட்டமன்ற உறுப்பினர், ``எங்களுக்கு முதலமைச்சர் முகத்தைப் பார்க்க வேண்டும், அவர் சிரிப் பதைப் பார்க்க வேண்டும்'' என்கிறார். நான் கூறினேன், ``இங்கு எதிரே எங்க ளால் உட்கார முடியவில்லை. இவற்றை யெல்லாம் பார்க்க முடியவில்லை, நாங் கள் எழுந்து போய்விடுகிறோம், நீங்கள் வேண்டுமானால் இங்கு வந்து உட்கார்ந்து கொள்ளுங்கள்'' என்றேன்.

இன்னொரு சட்டமன்ற உறுப்பினர், எழுந்து சொல்கிறார். ``முதலமைச்சருக்கு என்னுடைய நன்றி'' என்றார். ஏன் தம்பி என்றேன்.

"நான் வேலை இல்லாமல் இருந்தேன், எனக்கு வேலை போட்டுக்கொடுத்துவிட் டார். எனக்கு வீடு இல்லை, இப்போது வீடு வாங்கிக் கொடுத்துவிட்டார். கார் இல்லா மல் சுற்றிக்கொண்டு இருந்தேன், இப் போது எனக்கு காரும் கொடுத்துவிட்டார். எனக்கு இப்போது சமீபத்தில் ஒரு காதல் தோல்வி ஏற்பட்டுவிட்டது" என்றார். புதிய திட்டம் போல இருக்கிறது, என்று நான் நினைத்தேன். சரி, பெரிய மாற்றம்தான் என்று எண்ணிக்கொண்டேன். இதெல் லாம்தான் சட்டமன்றத்தில் நடக்கிறது.

வெறும் பாட்டுக்கச்சேரிதான் சட்டமன்றத்தில் நடக்கிறது!

எல்லோரும் பாட்டுப் பாடுகிறார்கள். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் பேசு வது கிடையாது, வெறும் பாட்டுக்கச்சேரி தான். பொதுவாக நாங்கள் கேள்வி கேட் டால், எதிர்க்கட்சி உறுப்பினர் கேள்வி கேட்டால், ஆளுங்கட்சி உறுப்பினர்கள், அமைச்சர்கள் பதில் சொல்வார்கள். அப்பு றம் நாங்கள் குறுக்குக் கேள்வி கேட்க லாம். நாங்கள் கேள்வி கேட்டால், எதிர்ப் பாட்டுப் பாடுகிறார்கள். இதற்காக நாங்கள் பதில் பாட்டு பாட இப்போது போய் பாட்டு கிளாஸிலா சேர முடியும்? சபாநாயகரிடத் தில் கூறினால், அவரும் பாடுகிறார். நான் கூறிவிட்டேன், ``சபாநாயகர் அவர்களே, இது சரியில்லை. எங்களுக்கு சந்தேகம் வருகிறது, இது சட்டமன்றமா அல்லது பாட் டுக்குப் பாட்டு நிகழ்ச்சியா, சூப்பர் சிங்கர் நிகழ்ச்சியா என்ற அளவுக்கு மோசமாகப் போய்க்கொண்டிருக்கிறது சட்டமன்றம்.

ராணிப்பேட்டை சட்டமன்ற உறுப்பி னர், எழுந்து ஒரு நாள் பேசுகிறார். என்ன தெரியுமா சொல்கிறார்? ``என் தொகுதி யில் ஒரு பெரிய டயர் தொழிற்சாலை இருக்கிறது. அந்த டயர் தொழிற்சாலையி லிருந்து அங்கு பெரிய அளவில் தினமும் லட்சக்கணக்கான டயர்கள் தயாரிப்ப தனால், புகை வருகிறது. என் தொகுதி மக் களுக்கு புகை வருவதனால் பெரிய மாசு பிரச்சினை வருகிறது. இந்த அரசு உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று ராணிப்பேட்டை சட்டமன்ற ஆளுங்கட்சி உறுப்பினர் பேசுகிறார்கள்.

உடனே சுற்றுச்சூழல் அமைச்சர் எழுந்து பேசுகிறார். ``இது தி.மு.க.வின் சதி. தி.மு.க. ஆட்சியில்தான் இதெல்லாம் நடக்கும், நாங்கள் இதை விடமாட்டோம். நான் இன்றைக்கே ஆய்வுக்குப் போகி றேன், முதலமைச்சரையும் அழைத்துக் கொண்டு போகப்போகிறேன்" என்கிறார். உடனே தொழில்துறை அமைச்சர் அவர் கள் எழுந்து சொல்கிறார்கள். ``இங்கே பாருங்கள், அமைச்சர் அவசர முடிவு எல் லாம் எடுத்துவிடக்கூடாது. நாங்கள் எவ்வ ளவு கஷ்டப்பட்டு லண்டனுக்குச் சென்று முதலமைச்சர் தொழில்கள் எல்லாவற்றை யும் ஈர்த்துக்கொண்டு வருகிறார். அத னால், நாங்கள் இதையெல்லாம் அனும திக்கமாட்டோம். நீங்கள்தொழில்துறைக்கு எந்தப் பாதிப்பும் இல்லாமல் செய்யுங்கள்" என்கிறார்.

கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் சட்டமன் றத்தில் விவாதம் செல்கிறது. நாங்கள் எல் லாம் எழுந்து யோசிக்கிறோம், சரி, ராணிப் பேட்டையில் இப்படி நமக்குத் தெரியாமல் ஒரு தொழிற்சாலை, அது என்ன ரப்பர் தொழிற்சாலை என்று போய் பார்த்தால், அது மிதிவண்டிக்கு பஞ்சர் ஒட்டுகின்ற கடை. பஞ்சர் ஒட்டுகின்ற கடைக்குப் பஞ்சாயத்து நடக்கிறது, ஒரு மணி நேரம் சட்டமன்றத்தில். இப்படித்தான் அங்கு சட்ட மன்றம் நடந்து கொண்டிருக்கிறது.

உதயசூரியன் சின்னத்தில் வாக்களியுங்கள்!

இந்தச் சட்டமன்றத்திற்கு நீங்கள் ஒரு நல்ல சட்டமன்ற உறுப்பினரை அனுப்பி வைக்க வேண்டும் என்றால், நான் உங் களிடத்தில் கேட்டுக்கொள்வது, சகோதரி சுகன்யா அவர்களை உதயசூரியன் சின் னத்தில் வாக்களித்து நீங்கள் அனுப்பி வைக்க வேண்டும். அமைச்சர்கள் இருக் கிறார்கள் அல்லவா, ஒவ்வொரு அமைச்ச ருக்கும் நாங்கள் ஒரு பட்டப்பெயர் வைத் திருக்கிறோம். ஏனென்றால், யாருக்குமே அமைச்சர்கள் பெயர் தெரியாது, முதல மைச்சருக்கே தெரியாது. பட்டப்பெயர் சொல்லிக் கூப்பிட்டால் மட்டும்தான் அவர் களுக்குத் தெரியும்.

நான் சொல்கிறேன் நீங்களே கண்டு பிடித்துக்கொள்ளுங்கள். `ரீல்ஸ் அமைச் சர்' `தொழில்துறை அமைச்சர்', `முறுக்கு அமைச்சர்', `சங்கி அமைச்சர்', `உருட்டுக் கட்டை அமைச்சர்' தமிழ்நாட்டினுடைய நிதித்துறை அமைச்சர். பவுடர் அமைச்சர். பவுடர் அமைச்சர் என்றால், நீங்களாக முகத்தில் பவுடர் போட்டுக்கொண்டு வருகிறார் என்று நினைத்து விடாதீர்கள், போதைப் பவுடர். ஐ.பி.எல். போட்டியில் எல்லாரையும் வைத்துக்கொண்டு

தொடர்ச்சி 4-ஆம் பக்கம்